# தமிழர் பண்பாட்டில் விருந்தோம்பல் : சங்கமருவியகால அற இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**திருமதி ராதிகா விமல்குமார்**
மனைப்பொருளியல் அலகு
யாழ்ப்பல்கலைக்கழகம்
radhika.dec1@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

தமிழ் மொழியின் பழமையான இலக்கியங்கள் அரிய கருத்துக்களையும், உயர்ந்த பண்புகளையும் எடுத்துக்காட்டுகின்றன. மனிதனுடைய அறப்பண்புகள், எண்ணம், சொல், செயல் மூன்றிலும் வெளிப்படும் ஆயினும் காலச்சூழற்பண்பு மாற்றத்திற்கு வழிவகுத்துவிடும் என்பதால் இலக்கியங்கள் தொடர்ந்து அறத்தை வலியுறுத்தி வந்துள்ளன. தமிழர் பண்பாட்டில் அறம், ஒழுக்கம், கல்வி, விருந்தோம்பல், இன்னாசெய்யாமை போன்றன உயரிய பண்பாட்டுக்கூறுகளாகவே காணப்பட்டன. இவற்றில் தமிழரின் ஒழுக்க நெறிமுறைகளிலும் பண்பாட்டிலும் சிறந்து விளங்குவது விருந்தோம்பற் பண்பாடாகும். இதனை அறங்களின் தலையாய அறமென திருவள்ளுவர் எடுத்தியம்பி யுள்ளார். பண்டைய தமிழரின் வரலாற்றில் தலையானது விருந்தோம்பலாகும். பசிப்பிணி போக்குவ தனையே முதன்மை நோக்கமாகக் கொண்டு வாழ்ந்த பெருமை தமிழ்ச் சமூகத்திற்கு உரித்துடையதாகும். அவ்வகையில் தமிழர் பண்புகளில் நம்மால் மறைக்கப்பட்ட அல்லது மறுக்கப்பட்ட பண்புகளில் ஒன்றாக விருந்தோம்பல் அமைகின்றது. இவ்வகையான பண்பாட்டுக் கூறானது தற்போதைய தமிழ் சமூகத்தினரிடையே அருகி வருவதனைக் காணக்கூடியதாக உள்ளது. அவ்வகையில் தமிழர் பண்பாட்டில் விருந்தோம்பல் எனும் இவ்வாய்வானது சங்கமருவிய கால பதினெண்கீழ்கணக்கு நூல்களில் அறம் தழுவிய இல்வாழ்க்கைப் பண்பாட்டை வலியுறுத்தும் திருக்குறள், ஆசாரக்கோவை போன்ற நூல்கள் சுட்டிக்காட்டும் விருந்தோம்பற் பண்பாடு பற்றிய கருத்துக்களை ஆராய்வதாக அமைகிறது. விருந் தோம்பலின் சிறப்புக்களையும் முக்கியத்துவத்தினையும் மக்களிடையே எடுத்துணர்த்தும் நோக்கிலும், தமிழர்களிடையே நலிவுற்று வரும் விருந்தோம்பற் பண்பாட்டை வலுப்பெறச்செய்வதனையும் நோக்காகக் கொண்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்விற்கான தரவுகள் நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள் மூலமாகப் பெறப்பட்டு பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது.

திறவுச் சொற்கள் : விருந்தோம்பல், தமிழர், பண்பாடு, அறநூல்கள்

## முன்னுரை

மனிதனுடைய வாழ்க்கையில் காணப்படுகின்ற ஒழுகலாறுகள், நடத்தைகள் நம்பிக்கைகள், விழுமியங்கள் முதலியவற்றைக் குறிப்பது பண்பாடாகும். சமூகப் பண்பாட்டில் அதன் தன்மைகள், செயல்பாடுகள் நிலைகள், மதிப்பீடுகள் ஆகியவை மக்களின் வாழ்க்கை நிலையினை விளக்குவனவாக அமைந்துள்ளன. தனிமனிதனின் பழக்கவழக்கங்களுக்கும் அம்மனிதன் பிறரோடு கொள்கின்ற உறவுகளுக்கும் அடித்தள மாக அமைவது பண்பாடு. இவ்வகையான பண்பாடு காலத்திற்கேற்பவும் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளுக்கேற்பவும் மாறக்கூடிய தன்மை உடையது. தமிழ் மரபில் பண்பாடு என்பது நம்மை உலகிற்கு அடையாளம் காட்டும் தன்மையாகவே

அமைகின்றது. தமிழர் பண்பாடு தமிழ் மக்களுக்கென்று பல நெறிகளை வகுத்துள்ளது. தமிழர் பண்பாட்டில் சிகரமாக விருந்தோம்பல் பண்பு விளங்குகின்றது. இல்லறத்தின் சிறப்புகளுள் ஒன்று விருந்தோம்பற் பண்பாடாகும். தமிழர் தம் வீட்டிற்கு வரும் விருந்தினரை ஓம்புவதும், சுற்றத்தாரை உபசரிப்பதும். இரப்பார்க்கு ஈதலும் முக்கிய பண்பாகப் போற்றி வாழ்ந்தார்கள். இல்லறக்கடமைகளில் ஒன்றான திருமணம் நடைபெறுவதன் நோக்கமே விருந்தோம்பலாகும் என தமிழர் பண்பாட்டு கூறினை சிறப்பித்து எடுத்துக்காட்டியுள்ளனர். இலக்கியங்கள் மக்களின் வாழ்க்கை முறையை எடுத்துரைக்கும் சான்றுகளாகும். அவ்வகையில் சங்கமருவியகால பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் அறநூல்கள் பல்வேறுபட்ட அறக்கருத்துக்களை முன்வைப்பவையாகவும் மனித வாழ்க்கையை நெறிப்படுத்தும் மூலங்களாகவும் அமைந்துள்ளன. இவற்றில் அறச் செயற்பாடான விருந்தோம்பல் பற்றிய கருத்துக்களை அதிகளவில் உள்ளடக்கியவையாக திருக்குறள், ஆசாரக்கோவை என்பன திகழ்கின்றன. இந்நூல்கள் இல்வாழ்க்கைப் பண்பாட்டை வலியுறுத்துபவையாகவும் காணப்படுகின்றன.

தற்கால மக்களிடையே காணப்படுகின்ற ஒற்றுமையின்மை, புரிந்துணர்வின்மை போன்றவற்றுக்கு அவர்களிடையே காணப்படுகின்ற இடைவெளியே பிரதான காரண மாக அமைகின்றது. அவ்வகையில் பண்டையத் தமிழர்களின் சிறப்பியல்புகளின் ஒன்றான விருந்தோம்பல் உற்றார் உறவினரிடையே மட்டுமல்லாமல் அறிந்திராதவர்களுக்கும் இடையேயான உறவினை உருவாக்கும் அம்சமாக விருந்தோம்பல் அமைந்தது. பசியென்று வருவோர்க்கு அவர்களை இன்முகத்தோடு வரவேற்று உபசரிக்கும் பண்பு மக்களிடையே ஒற்றுமையுணர்வை ஏற்படுத்தியது எனலாம். தமிழர் பண்பாட்டில் அருகி வருகின்ற விருந்தோம்பற் பண்பாட்டை எடுத்துணர்த்துவதாக தமிழர் பண்பாட்டில் விருந்தோம்பல் எனும் இவ்வாய்வு அமைகிறது.

**ஆய்வின் நோக்கம்**

தமிழரின் பாரம்பரிய பண்பாட்டு அம்சங்களில் முதன்மையாகத் திகழும் விருந்தோம்பல் தற்கால மக்களிடையே அருகி வருவதனால், அதனை மேம்படுத்தும் நோக்கிலும் மக்களிடையே குறிப்பாக இளையவர்களிடையே தமிழர் மரபுகள், பண்பாடுகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கிலும் இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வு அணுகுமுறை**

விருந்தோம்பல் பற்றிய கருத்துக்கள் விளக்கமுறை ஆய்வினை அடிப்படையாகக் கொண்டு நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள் என்பவற்றின் துணையுடன் ஆராயப் பட்டுள்ளது.

**ஆய்வு வரையறை**

அறம், பொருள், இன்பம், வீடு என்ற முதற்பொருள் நான்கினுள் முதலில் அறம் தலை சிறந்ததாகவும் சமுதாயத்திற்கு நல்லதோர் அடிப்படையாகவும் காணப்படுகின்றது. அவ்வகையில் அறச் செயற்பாடுகளில் தலைசிறந்ததாகக் காணப்படும் விருந்தோம்பற் பண்பாட்டினை சங்கமருவிய கால அறநூல்களான திருக்குறள், ஆசாரக்கோவை போன்ற நூற்கருத்துக்களை வரையறையாகக் கொண்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப் பட்டுள்ளது.

**ஆய்வுப்பெறுபேறுகளும் கலந்துரையாடலும்**

## 1. தமிழர் பண்பாட்டில் விருந்தோம்பல்

*தமிழர் பண்பாடு தனித்துவம் கொண்ட பண்பாடாகும். இப்பண்பாட்டில் சிறந்து விளங்குவது விருந்தோம்பலாகும். பண்டையத் தமிழரின் வரலாற்றில் தலையானது விருந்தோம்பலாகும். பசிப்பிணியைப் போக்கும் சிறந்த செயலாக விருந்தோம்பல் காணப் படுகின்றது. விருந்து என்பதற்கு புதுமை என்றும் ஓம்பல் என்பதற்கு பாதுகாத்தல் என்றும் பொருள் வழங்குவர். விருந்தோம்பல் என்ற சொல்லிற்குப் புதியவரைப் பசிப்பிணியி லிருந்து பாதுகாத்தல் என பொருள் கூறுவர். தமிழர் பண்பாட்டு மரபுகளுள் விருந்து பேணுதல் குறிப்பிடத்தக்கது. பண்டையத் தமிழர்கள் விருந்தோம்பலில் சிறந்து விளங்கினர் என்ப தற்கு இலக்கியங்கள் சான்றுகளாக காணப்படுகின்றன. பெண்கள் விருந்தினர்களை உபசரிப்பதையே தலையாய கடமையாகக் கொண்டிருந்தனர். ஊடலைத் தீர்க்கும் மருந்தாக விருந்தினர் வருகை, விருந்தோம்பல் என்பன அமைந்திருந்தன. பழந்தமிழர் தங்கள் இல்லத்தைக் கூட விருந்தோம்பலுக்கு ஏற்பத் திட்டமிட்டு உருவாக்கினர். இது விருந்தோம்பலின் அவசியத்தை வலியுறுத்தியது எனலாம். நம்மை நாடி வரும் விருந்தினரை இன்முகத்தோடு வரவேற்று, உணவளித்து அன்புடனும் ஆர்வத்துடனும் அவர்களை உபசரிப்பது தமிழர் வாழ்க்கையில் தலைசிறந்த பண்பாகக் கருதப்படுகின்றது. தனக்கு உதவி செய்தவரை மறக்காது விருந்து படைப்பது தமிழர் வழக்கமாகும். விருந் தினரை உபசரிப்பது பிறப்பின் அர்த்தத்தை வெளிப்படுத்துவதாகும். இது தமிழர்களுக்கே உரித்தான தனித்துவமாகும்.*

## 2. திருக்குறள் வலியுறுத்தும் விருந்தோம்பல் பண்பாடு

*பண்டையகாலத் தமிழர்களின் நாகரீகத்தையும், பண்பாட்டையும் அறிவதற்குப் பெரிதும் துணை புரிவது அக்கால மக்களின் வாழ்க்கை முறையாகும். அத்தகைய வாழ்க்கை முறையைப் பற்றி அறிவதற்கு அம்மக்களின் வாழ்வியல் எச்சங்களான இலக்கியங்களே பெரிதும் துணைபுரிகின்றன. அவ்வகையில் சங்கமருவிய காலத்தில் தோன்றிய அறநெறி நூல்களில் முதன்மையானதும், சிறப்புடையதுமானதாக போற்றப் படுவது திருக்குறளாகும். மனித வாழ்வில் அறம் தழுவிய இல்வாழ்க்கைப் பண்பாட்டை வள்ளுவர் திருக்குறளினூடாக எடுத்துக்கூறியுள்ளார். அவ்வகையில் தமிழர் பண்பாட்டு மரபுகளுள் முதன்மையாகத் திகழும் விருந்தோம்பலினை வள்ளுவர் விருந்தோம்பல் எனும் அதிகாரத்தினூடாக சிறப்பித்துக் கூறியுள்ளார். விருந்தோம்பல் என்பது தம்மிடம் வந்த விருந்தினரைப் போற்றிக் காத்தல் என பொருள்படும். ஓம்பல் எனும் அடை மொழி யுடன் இந்த ஒரு அதிகாரமே உள்ளது. இது இல்லத்தார்க்கு உரிய கடமைகளில் ஒன்றாக வும் நோக்கப்படுகின்றது. அவ்வகையில் திருக்குறளில் வெளிப்படுத்தப்படும் விருந் தோம்பலின் சிறப்புக்களையும், விருந்தோம்பும் முறைகளையும் விருந்தோம்பலின் அவசி யத்தையும் நோக்கத்தக்கது இக்காலத்தின் கட்டாயமாகும் என்பதில் எவ்வித ஐயமு மில்லை.*

### 2.1. விருந்தோம்பலின் முக்கியத்துவம்

*விருந்தோம்பல் எனும் அறச்செயல் பண்டைய மக்களிடையே சிறந்த பண் பாட்டுக் கூறாகவும் அறச்செயற்பாடுகளில் இன்றியமையாத ஒன்றாகவும் காணப்பட்டது. அவ்வகையில் விருந்தோம்பலின் அவசியத்தை பின்வரும் குறட்பாக்களினூடாக திருவள்ளுவர் எடுத்துணர்த்தியுள்ளார். அதாவது,*

"இருந்தோம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு." (குறள் - 81)

என்ற குறளினூடாக கணவன், மனைவி ஒன்றிணைந்து இல்வாழ்க்கை நடத்துவதன் நோக்கம் விருந்தினரை அன்பாக வரவேற்று விருந்தோம்புவதற்காகும் என விருந்தோம்பலின் முக்கியத்துவத்தினையும் அவசியத்தையும் திருவள்ளுவர் வலியுறுத்து கின்றார். தமிழர் பண்பாட்டில் விருந்தோம்பல் தனியிடம் பெறுகின்றது. இல்லறக் கடமைகளில் ஒன்றான திருமணம் நடைபெறுவதன் நோக்கமே விருந்தோம்பலாகும். என வள்ளுவர் குறிப்பிடுகின்றார். அத்துடன்

"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற்று அன்று". (குறள் - 82)

தன் வீட்டிற்கு வந்த விருந்தினர் வெளியில் இருக்க தான் மட்டும் உள்ளே தனித்து உண்ணுவது சாவா மருந்து என்று சொல்லப்படும் உயர்ந்த "காய கற்பம்" என்றாலும் கூட அது விரும்பத்தக்கது அல்ல என விருந்தோம்பலின் அவசியத்தை வள்ளுவர் வலியுறுத்து கின்றார். அதாவது சாவா மருந்தாக இருந்தாலும் வீட்டிற்கு வரும் விருந்தினரை வர வேற்று உணவளித்தலானது மனித வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய ஒன்றாகும் என்பதனை வலியுறுத்துகின்றார்.

"வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று. (குறள் - 83)

என்ற குறளினூடாக தன்னைக் காணவரும் விருந்தினரை நாள்தோறும் விருந்தோம்பல் செய்து போற்றுகின்றவனுடைய வாழ்க்கை என்றும் துன்பத்தால் வருந்தி கெடுவதில்லை எனவே விருந்தோம்பல் எனும் உயரிய பண்பாடு என்றும் போற்றுதற்குரியது என அதன் அவசியத்தை தனது குறட்பாவினூடாக எடுத்துரைத்துள்ளார்.

அத்துடன் விருந்தினர்களை உபசரிப்பது "பெரும்பாக்கியம்" என்றும் விருந் தோம்பல் செய்யாமல் இருப்பவர்களை "மடமை உடையோர்" என்றும் வள்ளுவர் குறிப்பிடுகின்றார். இதனை

"உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு". (குறள் -89)

பொருள் இருந்தும் இல்லாத நிலை என்பது விருந்தினரை உபசரிக்க அறியாமை ஆகும் அது அறிவில்லாதவர்களிடம் உண்டு என குறிப்பிடுவதுடன் வீட்டிற்கு வரும் விருந்தினரை வரவேற்றல் வேண்டும் எனவும் வள்ளுவர் இவ்வுலக மக்களுக்கு எடுத்துக் காட்டுகின்றார்.

**2.2. விருந்தோம்பலின் சிறப்புக்கள்**

உலகில் உள்ள உயிர்களுக்கு உணவளித்தல் மிகப்பெரிய புண்ணியச் செயலாக அன்று தொட்டே மக்கள் கருதி வந்துள்ளனர். அவ்வகையில் அறத்தை வலியுறுத்தும் திருக் குறளில் விருந்தோம்பலின் சிறப்புக்களை பின்வரும் குறட்பாக்கள் எடுத்துக் காட்டுகின்றன.

"அகன்அமர்ந்து செய்யாள் உறையும் முகன்அமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல்". (குறள் - 84)

இல்வாழ்க்கையில் நல்ல விருந்தினராய் வந்தவரை முகமலர்ச்சி கொண்டு போற்றுதல் வேண்டும் அவ்வாறு போற்றுகின்றவனுடைய வீட்டிலே திருமகளானவள் அகம் மலர்ந்து வாசம் செய்வாள் என விருந்தோம்பலின் சிறப்பினை எடுத்துக்காட்டியுள்ளார்.

வீட்டிற்கு வந்த விருந்தினரை உபசரித்து முதலில் அவரை உண்ணச் செய்து பிறகு மிஞ்சியதைத் தான் உண்பவனது விளைநிலத்தில் தானாகவே விதை விளையும் என விருந்தோம்பலினை சிறப்பித்துக்கூறும் இப்பாடலடிகள்

"வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி

மிச்சில் மிசைவான் புலம். (குறள் - 85)

என விருந்தோம்பலினை வள்ளுவர் சிறப்பித்துக் கூறியுள்ளார். வீட்டிற்கு வரும் விருந் தினருக்கு முதலில் உணவளித்து உபசரிப்போரின் இல்லத்தில் செல்வம் குறையாது விளையும் என்பதனை வள்ளுவர் எடுத்துணர்த்தியுள்ளார். அத்துடன்

"செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்

நல்விருந்து வானத் தவர்க்கு. (குறள் -86)

என்ற குறட்பா வந்த விருந்தினரைப் பேணிப் போற்றி இனிவரும் விருந்தினரைப் பேணிப் போற்ற எதிர்பார்த்து இருப்பவனை வானவர்கள் போற்றுவார்கள் என்கிறது. வந்த விருந்தையும் வரும் விருந்தையும் சிறப்புடன் செய்வது இல்லத்தார் கடமையாகும். மனிதன் சிறந்த பேற்றைப் பெறுவதற்கான சிறந்த வழி விருந்தோம்பலாகும் என திருவள்ளுவர் விருந்தோம்பலினைச் சிறப்பித்துக் கூறியுள்ளார். அத்துடன்

"இணைத்துணைத்து என்பதொன்று இல்லை விருந்தின்

துணைத்துணை வேள்விப் பயன்". (குறள் -87)

என்ற குறட்பாவினூடாக விருந்தோம்பலின் பயனை விருந்தினர்க்குக் கொடுக்கும் பொருள்களைக் கொண்டு இந்த அளவு என்று அளவிடுதல் கூடாது. கொடுக்கும் அளவு சிறிதாக இருப்பினும் பெறும் விருந்தினரின் நிலையையும் கொடுக்கப்பட்ட காலச் சூழலையும் கொண்டு பயனை அளவிட வேண்டும் என வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

"பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி

வேள்வி தலைப்படா தார். (குறள் - 88)

விருந்தினரை ஓம்பி விருந்தோம்பல் என்னும் யாகத்தைச் செய்யத் தவறியவர்கள் பொருள் களை வருந்திச் சேர்த்துப பின்னர் மொத்தமாக இழக்கும் போது விருந்தோம்பற் செய்யத் தவறியமையை எண்ணி வருந்துவர் என்கிறார்.

### 2.3. விருந்தோம்பும் முறை

வீட்டிற்கு வரும் புது உறவினர்களை, விருந்தினர்களை முகமலர்ச்சியோடு வரவேற்க வேண்டும் இல்லையெனில் விருந்தினர் மணம் புண்படும் என்பதனை,

"மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து

நோக்கக் குழையும் விருந்து" (குறள் - 90)

என்ற குறள் மூலம் விருந்து பேணும் முறைமையை வள்ளுவர் சிறப்பாக எடுத்துக் காட்டி யுள்ளார். மிக மெல்லிய அனிச்சப் பூவை முகர்ந்ததும் வாடிவிடும். அதே போல் விருந்து வழங்குபவர் விருந்தினரை சற்றே முகம்கோணி பார்த்தாலும் விருந்தினர் வருந்துவர் எனவும் முக மலர்ச்சியுடனும், அன்புடனும் விருந்தோம்புதல் வேண்டும் எனவும் வள்ளுவர் வலியுறுத்துகின்றார்.

### 3.ஆசாரக்கோவை வலியுறுத்தும் விருந்தோம்பலும் விருந்தோம்பும் முறைகளும்

மனித வாழக்கைக்கு தேவையான ஒழுக்கத்தினை கூறுவது ஆசாரக்கோவை யாகும். ஒழுக்கம் என்பது ஒருவருக்கு உயர்வினையும், அவர்களின் நன்னடத்தையும்

கூறுகின்றது. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஆசாரக்கோவை என்பது அறக்கருத்தை கூறும் நூலாக உள்ளது. அன்றாட வாழ்க்கையில் விருந்தோம்பல், ஒழுக்கத்தையும் பறை சாற்றும் நூலாக காணப்படுகின்றது. அவ்வகையில் மனித வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய ஒழுக்கமாக விருந்தோம்பல் காணப்படுகின்றது. நம் இல்லம் தேடி விருந்தினர் இரவில் வந்தாலும் அவர்களை முகமலர்ச்சியுடன் வரவேற்று அவர்களுக்கு அன்புடன் விருந்து படைத்து உபசரிப்பதே சிறந்த விருந்தோம்பல் பண்பாகும். இத்தகைய விருந் தோம்பல் பற்றிய கருத்துக்கள் ஆசாரக்கோவையில் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன. மனித வாழ்க்கைக்கு “உணவு” என்பது இன்றியாமையாத ஒன்றாக விளங்குகிறது. உணவு இல்லை என்றால் எந்த ஒரு உயிரும் உயிர் வாழ முடியாது. அத்தகைய சிறப்பு வாய்ந்த உணவை பிறருக்கு கொடுத்து வாழும் விருந்தோம்பற் பண்பினை ஆசாரக்கோவை ஓர் ஒழுக்கச் செயற்பாடாக எடுத்துகாட்டுகிறது.

“முறுவ லினிதுரை கானீர் மணைபாய்
கிடக்கையோ டிவ்வைந்து மென்ப தலைச்சென்றார்க்
கூணொடு செய்யுஞ் சிறப்பு. (ஆசாரக்கோவை 54)

என்ற பாடலடிகளினூடாக நம் வீட்டிற்கு வரும் விருந்தினரை இனிய சொற்களை கூறி வரவேற்று, அமர இடம் கொடுக்க வேண்டும். பின்பு முகமலர்ச்சியுடன் விருந்து படைக்க வேண்டும் என்று முள்ளியார் கூறியுள்ளார். பிற உயிர்களுக்கும், நோயுற்றவர்களுக்கும் உணவை கொடுத்துப் பின் உண்ணுதல் என்பது மனித்னின் ஒழுக்கமாக திகழ்கிறது. பிற உயிர்களுக்கு கொடுத்து உண்ணும் ஒழுக்கநெறி மனித வாழ்க்கையில் இன்றியமையாத்து என்பதனை ஆசாரக்கோவை எடுத்துக்காட்டுகின்றது. அத்துடன்

“விருந்தினர் மூத்தோர் பசுசிறை பிள்ளை
இவர்க்கூண் கொடுத்தல்லா லுண்ணாரே யென்றும்
ஒழுக்கம் பிழையா தவர். (ஆசாரக்கோவை -21)

என்ற பாடலடிகள் மூலம் ஒழுக்கம் தவறாத சான்றோர், என்பவர் விருந்தினர்கள், முதியவர், பசுக்கள், பறவை, பிள்ளைகள் போன்றவைக்கு உணவு கொடுக்காமல் தானும் உண்ண மாட்டார்கள். இவைகளுக்கு உணவு வழங்கிய பின்னரே உண்ணுவர் என விருந்தோம்புவர்களை சிறப்பித்துக் கூறியுள்ளார். அத்துடன்”

உயர்ந்ததின் மேலிரா ருள்ளழிவு செய்யா
ரிறந்தின்னா செய்தக் கடைத்துங் குரவ
ரிளங்கிளைகளு ருண்ணு மிடத்து (ஆசாரக்கோவை -40)

விருந்தினர் உணவு உண்டு கொண்டிருக்கும் பொழுது நல்லோர் அவருக்கு மேலான இருக்கையில் அமர மாட்டார்கள் எனவும் வந்திருப்போர் தமக்கு எல்லையற்ற துன்பங்களைத் தந்தவராக இருப்பினும் அவர் மனம் நோகும்படி எதுவும் செய்ய மாட்டார்கள் எனவும் விருந்தோம்பும் போது பின்பற்ற வேண்டிய நல்லொழுக்கங்களை யும் ஆசாரக்கோவை எடுத்துக்காட்டுகின்றது.

**4. விருந்தோம்பற் பண்பாடு அன்றும் இன்றும்**

பண்டைத் தமிழர்கள் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் உயர் பண்புடையவர் களாகத் திகழ்ந்தனர். மக்கள் மட்டுமல்ல மன்னர்களும் இன்முகத்துடன் அருகிலிருந்து தன்னை நாடி வந்த பரிசிலர்களுக்குச் சிறப்பாக விருந்தளித்து ஏற்றிப் போற்றியதை இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. விருந்தோம்பும் பண்பு தமிழர்களுடன் கூட

பிறந்ததாகும். மற்றோரின் பசியறிந்து அவர்களது பசியை ஆற்றுவதை அறங்கள் எல்லா வற்றுள்ளும் சிறந்தது என்ற மிக உயர்ந்த கொள்கையை உடையவர்கள் தமிழர்கள் என்பதை அறியப்படுகிறது. பழங்காலத்தில் விருந்தோம்பல் பண்பு உயர்வாகப் போற்றப் பட்டது. விருந்து என்பது உறவினர்களைக் குறிக்காது. புதியவர்களையும் குறித்தது. மேலும் ஒரு பெண்ணுக்குரிய இல்லற அறம், விருந்தோம்பல் என்பதை தமிழர் பண்பாடு எடுத்துணர்த்தியுள்ளது. இவ்வகையான ஒப்பற்ற பண்பாடு தற்கால மக்களிடையே மறைக்கப்பட்டும் மறக்கப்பட்டும் வரும் பண்பாடாக காணப்படுவது வருந்தத்தக்க விடய மாகும். நாகரிக மாற்றங்கள் ஏற்றத்தாழ்வுகள் என்பன மக்களுடைய பண்பாடு, ஒழுக்கம் என்பவற்றிலும் தாக்கம் செலுத்தியுள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது. வீட்டிற்கு வரும் புதியவர்களை உபசரித்தல் என்பதே விருந்தோம்பலின் கருத்தாகும். ஆயினும் புதியவர்கள் அல்லாத உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரை வரவேற்கும் பண்பு கூட நம்மினரிடையே குறைவடைந்து வருகின்றதெனக் கூறின் அதில் எவ்வித ஐயமுமில்லை. பண்டைய காலந்தொட்டுப் பேணப்பட்டு வரும் தமிழர்களுக்கே உரித்தான பண்பாடுகள் என்றும் போற்றப்பட வேண்டியவையாகும். இப்பண்பாடானது தற்போதைய இளையவர்களிடையே விழிப்புணர்வூட்டப்பட வேண்டிய ஒன்றாக காணப்படுகின்றது.

**ஆய்வு முடிவுரை**

வீட்டிற்கு வரும் விருந்தினரை உபசரித்தல் தமிழரின் தலையாய பண்பாகும். பண்டைத் தமிழர்கள் விருந்தோம்பலில் தலை சிறந்து விளங்கினர். பெண்கள் விருந்தினர் களை உபசரிப்பதையே தங்கள் கடமையாகக் கொண்டிருந்தனர். அத்துடன் ஊடலைத் தீர்க்கும் மருந்தாகவும் பசிப்பிணியை போக்கும் சிறந்த அறமாகவும் விருந் தோம்பல் காணப்படுகின்றது. இவ்வகையான விருந்தோம்பற் பண்பாடு தற்கால மக்களிடையே மறக்கப்பட்டும், ஒதுக்கப்பட்டும் வருவதனைக் காணக்கூடியதாக உள்ளது. அவ்வகையில் அறநிலைக்கு அப்பாற்பட்டு வாழும் இவ்வாழ்க்கை முறையானது தமிழர்களுக்கே உரித் தான பண்பாட்டை இழப்பதற்கு காரணமாக அமைகின்றது. காலந்தோறும் தமிழர்களின் அடையாளமாகத் திகழும் விருந்தோம்பலின் சிறப்பினைத் திருக்குறள், ஆசாரக் கோவை போன்ற நூல்கள் தெளிவாகவும் சிறப்பாகவும் எடுத்துரைத் துள்ளன. அவற் றினை பின்பற்றி தமிழர் பண்பாட்டுக் கூறுகளில் ஒன்றான விருந்தோம்பல் தமிழரின் இல்லங்கள் தோறும் போற்றப்படவேண்டும் என்பதனை இவ்வாய்வு வலியுறுத்துகின்றது.

**உசாத்துணை நூல்கள்**


1. ஆருர்தாஸ் 2008, திருக்குறள் அகராதி, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
2. கௌமாரீஸ்வரி, எஸ். 2009, பதினெண்கீழ்கணக்கு நூல்கள் மூலமும் உரையும், மஞ்சு ஆப்செட் பிரண்டர்ஸ், திருநெல்விக்கேணி, சென்னை.
3. பதினெண்கீழ்கணக்கு நூல்கள் மூலமும் உரையும், 2009, சாரதா பதிப்பகம், சென்னை.
4. பத்மதேவன், 2010, குறள் களஞ்சியம் கொற்றவை வெளியீடு, சென்னை.
5. அறவாணன் க..ப, 2011, சமூகப் பார்வையில் அற இலக்கிய களஞ்சியம், தமிழ்க்கோட்டம்இ, சென்னை.
6. தமிழமுது, ,. 2014, பதினெண்கீழ்கணக்கு நூல்கள், ஆப்செட் பிரிண்டர்சு, இராயப்பேட்டை, சென்னை.
7. விஜயராகவன், க. 2017, பழந்தமிழர் விருந்தோம்பும் திறன், சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்.மலர் 1.
8. திலகர், கு. 2018, பதினெண்கீழ்கணக்கு நூல்களில் தமிழர் வாழ்வியல், பாரதிதாசன் பல்கலைக்கழக மாநிலக் கருத்தரங்கு.
9. சசிகலா, வே. 2018, பழந்தமிழரின் விருந்தோம்பல், சான்லாக்ஸ் பன்னாட்டு தமிழியல் ஆய்விதல் மலர் 3.